செ.வெ.எண்.348/2009/செமதொஅ நாள்:14.10.2009

**பாதுகாப்பு விதிகளை பின்பற்றாத பட்டாசு கடைகள் சீல் வைக்கப்படும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப., அவர்கள் எச்சரிக்கை**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தீபாவளி பண்டிகையையொட்டி, பட்டாசு கடைகள் திறக்கப்பட்டுள்ளன. இந்த பட்டாசு கடைகள் அரசு விதித்துள்ள பாதுகாப்பு விதிகளை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும். அந்த விதிகளை மீறுகின்ற பட்டாசு கடைகள் உடனடியாக சீல் வைக்கப்படும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப., அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சென்னை புறநகர் பகுதிகளை சேர்ந்த பட்டாசு கடைகாரர்கள் புறநகர் காவல் ஆணையரிடமும், காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மற்ற பகுதிகளில் உள்ள பட்டாசு கடைகாரர்கள் மாவட்ட வருவாய் அலுவலரிடமும் உரிமம் பெற்றிருக்க வேண்டும். உரிமம் பெறாத பட்டாசு கடைகள் மீது வெடிபொருள் தடுப்புச் சட்டத்தின் கீழ் (Explosive Act) நடவடிக்கை எடுக்கப்படும். ஒவ்வொரு பட்டாசு கடைகளிலும் தீயணைப்பு உபகரணங்கள் குறிப்பாக தண்ணீர் வாளி, மணல் வாளி ஆகியவை வைக்கப்பட வேண்டும். ஒரு பட்டாசு கடைக்கும் இன்னொரு பட்டாசு கடைக்கும் இடையில் குறைந்த பட்சம் 15 மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும். பட்டாசு கடைகளில் உள்ள மின்சார சுவிட்சுகள் மற்றும் உபகரணங்கள் தரம் வாய்ந்தவையாகவும், மின்கசிவுகள் மற்றும் தீப்பொறிகள் ஏற்படாத வண்ணமும் பாதுகாப்பாக அமைக்கப்பட வேண்டும். “புகைப்பிடிக்க கூடாது” என்ற அறிவிப்பு பலகை வைக்கப்பட வேண்டும். பட்டாசு கடைகளில் பட்டாசுகள் மட்டுமே வைக்கப்பட வேண்டும். வேறு எந்த எளிதில் தீப்பற்றக்கூடிய பொருளும் வைக்க கூடாது. மேற்கண்ட பாதுகாப்பு விதிகளை பட்டாசு கடைகாரர்கள் கட்டாயமாக கடைபிடிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியிடுபவர்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.